

சிவகங்கை மாவட்டம் குன்றக்குடி தருமை மயிலை மேல்நிலைப்பள்ளியில் முதல்வரின் விலையில்லா மிதிவண்டியினை கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் வழங்கினார்.உடன் தவத்திரு குன்றக்குடிபொன்னம்பல அடிகளார், கோட்டாட்சியர் பால்துரை,முதன்மைக்கல்வி அலுவலர் பாலுமுத்து,குன்னக்குடி சுப்பிரமணியன், பள்ளத்தூர் கே.எஸ்.ரவி, மாவட்ட ஊராட்சி துணைத் தலைவர் சரஸ்வதி கருணாநிதி ஆகியோர் கலந்து கொண்டார்கள்.



திண்டுக்கல்லில் நடைபெற்ற புத்தகத் திருவிழாவில் உணவுத்துறை அமைச்சர் அர.சக்கரபாணி கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார். நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் மொ.நா.பூங்கொடி, மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் பாஸ்கரன், துணை மேயர் ராஜப்பா, திண்டுக்கல் இலக்கிய களம் நிர்வாக செயலாளர் கண்ணன், பொருளாளர் மணிவண்ணன், நிர்வாகிகள் ஆல்பர்ட் பெர்னான்டோ ஆகியோர் உள்ளனர்.


### ஆத்தூர் தொகுதியில்

# நீர்வரத்து பாதைகள் - நீர்நிலைகளை கண்காணிக்க வேண்டும்!

### ஊராட்சிமன்ற தலைவர்களுக்கு அமைச்சர் ஐ.பெரியசாமி உத்தரவு!

ஆத்தூர், அக்.17-

ஆத்தூர் தொகுதியில் நீர்வரத்து பாதைகள் மற்றும் நீர்நிலைகளை கண்காணிக்க ஊராட்சிமன்ற தலைவர்களுக்கு அமைச்சர் ஐ.பெரியசாமி உத்தரவிட்டுள்ளார். மருத்துவ ஓய்வில் இருந்தாலும் தொடர்ந்து மக்கள் பணியில் ஈடுபட்டு வரும் ஊரக வளர்ச்சி துறை அமைச்சர் ஐ.பெரியசாமிக்கு ஊராட்சி மன்ற தலைவர்கள், கட்சி நிர்வாகிகள் பாராட்டு தெரிவித்துள்ளனர்.



திண்டுக்கல் மாவட்டம் ஆத்தூர் சட்டமன்றதொகுதி திமுக உறுப்பினரும், திமுக மாநில துணை பொதுச்செயலாளரும் ஊரக வளர்ச்சி துறை அமைச்சருமான ஐ.பெரியசாமி அவர்களுக்கு கடந்த 10 தினங்களுக்கு முன்பு காய்ச்சல் ஏற்பட்டதால் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தார். தற்போது மருத்துவரின் ஆலோசனைப்படி வெளியாட்களை சந்திக்காமல் ஒய்வு எடுத்து வருகிறார். தற்போது புயல் மழை, மற்றும் தொடர்மழையால் ஆத்தூர் தொகுதியில் உள்ள நீர்;நிலைகளுக்கு மழை தண்ணீர் வரத்து வர தொடங்கியுள்ளது. மேலும் ஆத்தூர் தொகுதிக் குட்பட்ட காமராஜர் நீர்த்தேக்கத்திற்கும் மேற்கு தொடர்ச்சி மலையிலிருந்தும் தண்ணீர் வர தொடங்கியுள்ளது.

இதனால் நீர் நிலைகள் நிரம்பி மறுகால் பாயும் நிலைமை ஏற்பட்டு வருவதால் ஊராட்சி மன்ற தலைவர்கள் நீர்வரத்து பாதையில் உள்ள அடைப்புகளை அகற்றவேண்டும் என்றும், ஓடைகள் மற்றும் குளங்களை தூர்வாரும் போது 100 நாள் வேலைதிட்ட பணியாட்களுக்கு உரிய பாதுகாப்பு வழங்க வேண்டும் என்று உத்தரவிட்டார். இது தவிர காமராஜர் அணை நிரம்பி தண்ணீர்; மறுகால் ஓடும் குடகனாற்று கரை பகுதிகளை கண்காணிக்க வேண்டும் என்று ஊராட்சி மன்ற தலைவர்களுக்கு உத்தரவிட்டுள்ளார்.

இது தவிர தற்போது ஆத்தூர் தொகுதியில் செயல்பட்டு வரும் நலத்திட்ட பணிகள் குறித்தும் தேவைப்படும் நலத்திட்டங்கள் குறித்தும் அவ்வப்போது கட்சி நிர்வாகிகளிடமும் தொடர்ந்து தொலைபேசி மூலம் கேட்டறிந்து அதற்குரிய நடவடிக்கைகளை எடுத்து வருகிறார். மருத்துவர் ஆலோசனைப்படி ஓய்வில் இருந்தாலும் தொடர்ந்து ஆத்தூர் தொகுதியில் செயல்படுத்தி வரும் நலத்திட்ட பணிகள் குறித்து கேட்டறிந்ததற்கு கட்சி நிர்வாகிகளும் ஊராட்சி மன்ற தலைவர்களும் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

இது குறித்து ஆத்தூர் தொகுதியை சேர்ந்த ஊராட்சி மன்ற தலைவர்கள், ஒன்றிய நிர்வாகிகள் கூறுகையில் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த போதும் தற்போது மருத்துவர் ஆலோசனைப்படி ஓய்வில் இருக்கும் போது தொடர்ந்து தொகுதி மக்களின் செல்லப்பிள்ளையாக இருக்கும் ஊரக வளர்ச்சி துறை அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் எங்களிடம் பேசி நலத்திட்ட பணிகள் குறித்து கேட்டறிந்து வருவது எங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கிறது. இது தவிர கட்சிப்பணிகள் குறித்தும் கட்சி தொண்டர்களுக்கு செய்ய வேண்டிய நிதி உதவிகள் குறித்தும் ஆலோசனை செய்து வருவது கட்சி தொண்டர்கள் மீது அவர் வைத்திருக்கும் அன்பையும் பாசத்தையும் எடுத்துக்காட்டுகிறது என்றனர்.

### ஒன்றிய அரசை வலியுறுத்தி அனைத்து அரசியல் கட்சிகள் போராட்டம்! சிவகங்கை வழியாக

# பல்லவன் ரயிலை நீட்டிப்பது உட்பட 5 கோரிக்கைகள் உடனடி ஏற்பு!

### நகர்மன்றத் தலைவர் துரைஆனந்த் தகவல்!

சிவகங்கை, அக்.17-

மாவட்ட தலைநகர் சிவகங்கைவழியாகச் செல்லும் வாராந்திர மற்றும் விரைவு ரயில்கள் உட்பட சிவகங்கை ரயில்வே நிலையத்தில் பல்வேறு அடிப்படை வசதிகளை நிறைவேற்றக் கோரி சென்ற மாதம் 19ம்தேதி சிவகங்கையில் அனைத்துக்கட்சிகள், மற்றும் வர்த்தக சங்கம் பல்வேறு அமைப்புகள் சார்பில் முழு கடையடைப்பு போராட்டம் மற்றும் ரயில்மறியல் போராட்டம் சிவகங்கை நகர் மன்றத் தலைவர் சி.எம்.துரை ஆனந்த் தலைமையில் நடைபெற்றது.

இதன் தொடர்ச்சியாக சிவகங்கை நகர் மன்ற தலைவர் சி.எம்.துரை, ஆனந்த் தலைமையில்அனைத்து அரசியல் கட்சி பிரதி நிதிகள், மற்றும் பொதுநல அமைப்புகள் , அடங்கிய குழுவினர் இம்மாதம் 10ம் தேதி புதுதில்லியில் ஒன்றிய ரயில்வே இணை அமைச்சர் ராவ்சாகுப் பாட்டில்தன்வேயை நேரில் சந்தித்து கோரிக்கை மனுவினை அளித்து விளக்கி கூறினார்கள்.

கோரிக்கைகளை பரீசீலித்த அமைச்சர் சிவகங்கையில் இருந்து மானா மதுரையிலிருந்து சென்னை வரை பல்லவன் ரயிலை நீட்டிக்கக் கோரியும் நிறுத்தப்பட்ட மானாமதுரை - மன்னார்குடி ரயில் மீண்டும் இயக்குதல், தாம்பரம் - செங்கோட்டை ரயிலை சிவகங்கையில் நின்று செல்லவும் ராமேஸ்வரத்திலிருந்து சென்னை வரை பகல் நேர ரயில் விடுவது குறித்தும், வாரணாசி - ராமேஸ்வரம் ரயிலை சிவகங்கையில் நின்று செல்வது குறித்தும் சிலம்பு விரைவு ரயிலை தினசரி இயக்குவது குறித்தும் உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு ரயில்வே வாரியத்திற்கு உத்திரவிட்டார். மற்ற கோரிக்கைகளை பரிசீலித்து விரைவில் நடவடிக்கை எடுப்பதாக ஒன்றிய அமைச்சர் உறுதி கூறினார்.

இத்தகவலை நகர்மன்ற தலைவர் துரைஆனந்த் தெரிவித்தார்.



தேனி வடக்கு மாவட்டச் செயலாளர் தங்க தமிழ்ச்செல்வன் வழிகாட்டலின் படி தேனி வடக்கு ஒன்றிய செயலாளரும் தேனி ஊராட்சி ஒன்றிய குழு தலைவருமான சக்கரவர்த்தி வடக்கு ஒன்றிய பகுதிகளில் வீடு வீடாகச் சென்று இல்லந்தோறும் இளைஞர் அணி உறுப்பினர் சேர்க்கை நடைபெற்றது. தேனி வடக்கு ஒன்றிய பாக முகவர் பொறுப்பாளர்பொதுக்குழு உறுப்பினர் ராஜாரமேஷ், வடக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஆஜிப்கான், இளைஞர்அணி துணை அமைப்பாளர் ஜெயக்குமார், முன்னாள் தேனி ஒன்றிய தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் முருகஜெகதீசன், கிளைக் கழக செயலாளர் பாலகிருஷ்ணன் சுப்புராஜ் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.


3 –ம் ஆண்டு நினைவேந்தல்

மாண்புமிகு
மா.சுப்பிரமணியன் B.A., L.L.B.,
மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்
சென்னை தெற்கு மாவட்ட கழகச் செயலாளர்

அவர்களின் இளைய மகன்

சு.அன்பழகன்

நாள் : 17 – 10 – 2023

தாய் தந்தையரின்
தியாக உணர்வை
பறைசாற்ற பிறந்தாயே...
எங்கள் அன்பகத்தின்
இதயங்களை ஏங்கவிட்டு
சென்றாயே... அன்பு!

நீங்கா நினைவுகளுடன்...

அம்மா : காஞ்சனா சுப்பிரமணியன்
அண்ணன் : மருத்துவர் சு.இளஞ்செழியன்
அண்ணி : மருத்துவர் கீர்த்தா செழியன்

உறவினர்கள் மற்றும் நண்பர்கள்

